செ.வெ.எண்:25 நாள்:16.05.2019

**கரூர் மாவட்டம்**

**கரூர் மக்களவைத்தொகுதி மற்றும் அரவக்குறிச்சி சட்டமன்றதொகுதி இடைதேர்தலுக்கான வாக்கு எண்ணும் மையத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தனர்**

அதன் விபரம் வருமாறு:

நடைபெறவுள்ள 23-கரூர் மக்களவைத்பொதுத்தேர்தல் மற்றும் 134-அரவக்குறிச்சி சட்டமன்றதொகுதி இடைதேர்தலுக்கான வாக்கு எண்ணும் மையமான தளவாபாளையம் எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரியில் தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வா.விக்ரமன்.இ.கா.ப., ஆகியோர் இன்று (16.05.2019) பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

கரூர் மக்களவைத்தொகுதிக்குட்பட்ட கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், வேடச்சந்துர், மணப்பாறை, விராலிமலை ஆகிய சட்டமன்றத்தொகுதிகளுக்கும், அரவக்குறிச்சி சட்டமன்றதொகுதி இடைதேர்தலுக்கும் சட்டமன்ற தொகுதி வாரியாக வாக்கு எண்ணும் மையத்தில் முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளங்களில் வாக்கு எண்ணும் அறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் அறைகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் வாக்குப்பதிவு தணிக்கை இயந்திரங்களை பாதுகாப்பாக அறைகளில் (STRONG ROOM) வைக்கப்பட்டு எல்லை பாதுகப்பு படை மற்றும் தமிழக காவல்துறையினரின் மூன்றடுக்கு பாதுப்பின்கீழ் தொடர்கண்காணிப்பினல் வாக்கு எண்ணும் மையம் உள்ளது.

மேலும் வாக்கு எண்ணிக்கை நாளன்று தபால் வாக்கு எண்ணுவதற்கும், மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் வாக்குப்பதிவு தணிக்கை இயந்திரத்தில் (VVPAT - **Voter Verifiable Paper Audit Trail** ) பதிவான வாக்குகள் எண்ணுவதற்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் அறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும், சட்டமன்ற தொகுதி வாரியாக வாக்கு எண்ணுவதற்காக அமைக்கப்பட்டுள்ள மேசைகள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் அமர்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் மாவட்ட தேர்தல் அலுவலர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் திரு,கு.சரவணமூர்த்தி(கரூர்) திருமதி.மல்லிகா(கிருஷ்ணராயபுரம்) துணை காவல் கண்காணிப்பாளர்கள் திரு.பாரதி, பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் திரு.பாலமுருகன், திரு.மாணிக்கவாசகம், மண்மங்கலம் வட்டாட்சியர் திரு.இரவிக்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**